# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 64 — 1973 ජූනි 14 වැනි බ්‍රහස්පතින්දා — 1973.06.14**

64 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு யூன் மாதம் 14 ந் திகதி வியாழக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி IV—உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)**


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 251 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | 251 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. ... | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுகள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நாணுவித அறிவித்தல்கள் .. .. .. | — |


**கவனிக்க.**—பெண்களையும் இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தம்) சட்ட மூலம் 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கிராமாட்சி மன்றங்கள் கட்டளைச்சட்டம்**

13 ம் பிரிவின் கீழான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்கக் கிராமாட்சி மன்றங்கள் (திருத்தம்) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட கிராமாட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13 (1) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, திருகோணமலை உள்ளூராட்சித் துணை ஆணையாளர், பேட்ரம் ஆர்னல்ட் ஜெயராஜா காசிநாதர் ஆகிய நான், திருகோணமலை மாவட்டத்து அக்போபுர கிராமாட்சி மன்றத்தின் 5 ம் வட்டார உறுப்பினர் திரு. லியனகே தனபால கீர்த்திசேன பெரேரா, அவருடைய தெரிவின் பின்னர், சபைக்கு அறிவிக்காமல், சபையின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதைத் திருப்திகரமாயறிந்து, திருகோணமலை மாவட்டத்து அக்போபுர கிராமாட்சி மன்றத்தின் 5 ம் வட்டார உறுப்பினர், திரு. லியனகே தனபால கீர்த்திசேன பெரேரா, இவ்வறிவித்தல் இலங்கைக் குடியரசுச் செய்திமடலில் வெளியிடப்படும் திகதியிலிருந்து தனது பதவியைவிட்டு நீங்கியுள்ளார் என்பதை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

பே. ஆ. ஜெ. காசிநாதர்,
உள்ளூராட்சித் துணை ஆணையாளர்,
திருகோணமலை.

நகர மண்டபம்,
திருகோணமலை,
29.5.73.

6–452—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64

## துணை விதிகள்

**நரம்மலப் பட்டின சபை**

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

(256 ம் அதிகாரமாம்) பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் நரம்மலப் பட்டின சபையாலாக்கப்பட்டு அக் கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவினுல் அன்னுருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

கா. பெ. விக்கிரமநாயக,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973.05.15.

**துணைவிதி**

நரம்மலப் பட்டின சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியமத் துணைவிதிகளின் 22 ம் பாகத்தின் 3 ம் துணைவிதியின் நோக்கத்துக்கு வாகனங்களுக்கான வேறுபடுத்திக்காட்டும் எழுத்துக்கள் பின்வருமாறிருத்தல் வேண்டும் :—

மோட்டார் கார், மோட்டார் திரிக்கார், மோட்டார் லொறி, மோட்டார் பைசிக்கிள், வண்டி, கைவண்டி, ஜின்றிக்ஷோ, பைசிக்கிள், அல்லது திரிசயிக்கிள் தவிர்ந்த ஒவ்வொரு வாகனத்திற்கும்—

(அ) வியாபார நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படின்—නා. සු. ව. පා.

(ஈ) வியாபாரமல்லாத வேறு நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படின்—
නා. සු. පා.
ஒவ்வொரு இரட்டை மாட்டு வண்டிக்கும்—නා. සු. ව. ක.
ஒவ்வொரு ஒற்றை மாட்டு வண்டிக்கும்—නා. සු. ඛා. ත.
ஒவ்வொரு கைவண்டிக்கும்—නා. සු. අ. ක.
ஒவ்வொரு ஜின்றிக்ஷோவிற்கும்—නා. සු. රි.

இது சம்பந்தமாக 1968.12.20 ம் திகதியைக்கொண்ட 14,833 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகள் இத்தால் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

6–628—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

ச.வ.—பி. 33/69.

**கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் மாத்தளை மாவட்டத்திலுள்ள லக்கலை–பல்லேசியப்பற்றுக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டதும், அப்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான துணைவிதி.

க. பெ. விக்ரமநாயக,<br>
மேலதிக செயலாளர்,<br>
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,<br>
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,<br>
1973.05.26.

**துணைவிதி**

கிராமச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் நியமத் துணைவிதிகளின் 28 ஆம் பாகத்தில் காணப்படுகின்ற நீர்வழங்கல் சம்பந்தமான நியமத் துணைவிதிகள், லக்கலை–பல்லேசியப்பற்றுக் கிராமச் சபைக்கு அவை ஏற்புடையனவாகும் அளவுக்கு 27 (2) ஆம் துணைவிதியை நேரடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன—

"(3) சபையினால் தாபிக்கப்பட்டிருக்கும் நீர் வழங்கலிலிருந்து தனியாருக்கான இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளவளவுகளினது. சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர், முறைப்படி அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதன் மேல், ஏதேனும் தொழில் அலுவலின் பொருட்டு நீர் பயன்படுத்தப்படும் விடயத்தில் முதல் ½ அங்குல வடிகுழாய் ஒவ்வொன்றுக்கும் 2 ரூபா 50 சதமும் வீட்டுத்தேவை எதன்பொருட்டும் நீர் பயன்படுத்தப்படும் விடயத்தில் 1 ரூபாவும், அவ்வளவுகளில் பொருத்தப்பட்டுள்ள மேலதிகமான வடிகுழாய் ஒவ்வொன்றுக்கும் 50 சதமும் குறிப்பிட்ட நீர் வழங்கலிலிருந்தும் தண்ணீர் பெறுதற்கான ஒவ்வொரு மாதத்துக்கு முற்கூறிய கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்."

6–623—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| யூன் | .. | 22.6.73 | வெள்ளி | .. | 14.6.73 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| | | 29.6.73 | வெள்ளி | .. | 22.6.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ௵ ஒகத்து ௴ 18 ந் ௳.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.